தலைப்பு 242 - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 242 - முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகியிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சலின் கீழ் மூலதன செலவினமாக காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 1,011,202 தொகையிலான பௌதீக சொத்துக்கள் நிர்மாணிப்பு அல்லது கொள்வனவு அல்லது ஏனைய முதலீடுகள் கையகப்படுத்தல் என குறிப்பிடப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அரச கணக்குகள் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தியுள்ள நிதிக் கூற்றுக்கள் மாதிரிகளில், ஏசீஏ-சீ மாதிரியின் பிரகாரம் மூலதன செலவு பெறுமதிகள் ஏசீஏ-சீ மாதிரியில் ஏனைய மூலதன கையகப்படுத்தல் என கருதப்பட்டு மொத்த மூலதன செலவின் கூட்டுத்தொகையான ரூபா 1,011,202 என சீராக்கப்பட்டுள்ளது.	அரச கணக்குகள் வழிக்காட்டிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மீண்டெழும் செலவினங்கள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய மீண்டெழும் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	திறைச்சேரி கணினி அச்சிடல் குறிப்பு SA 11 பிரகாரம் 242-1-1-0-1003 (ஏனைய கொடுப்பனவுகள்) செலவின விடயத்திற்கு நி.பி 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களினால் ஏற்கப்பட்ட ரூபா 582,440 ஆன தொகை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஏசீஏ 2(ii) செலவின சுருக்கத்தில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தவறுதலாக ஏசீஏ 2(ii) செலவின சுருக்கத்தில் நி.பி 208 இன் கீழ் 1003 செலவின விடயத்திற்கு தொடர்புடைய பெறுமதியான ரூபா 582,440 காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	ஏசீஏ 2(ii) செலவின சுருக்கத்தில் SA 11 பிரகாரம், நி.பி 208 இன் கீழ் செலவினம் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும்.
(ii)	ஏசீஏ 2(ii) செலவின சுருக்கத்தில் 242-1-1-0-1003 இன் கீழ் காசு புத்தகத்தின் பிரகாரம் செலவினம் ரூபா 34,980,163 ஆன போதிலும், ரூபா 35,562,603 என காண்பிக்கப்பட்டிருந்தமையினால் அப் பெறுமதி ரூபா 582,440 அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி (i) பதிலின் பிரகாரம், நி.பி 208 இன் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய பெறுமதியான ரூபா 582,440 தொகையும் உள்ளடங்கலாக திறைச்சேரி கணினி அச்சிடல் குறிப்பு SA 10 பிரகாரம் 1003 செலவின விடயத்தின் கீழான மொத்த செலவான ரூபா 35,562,603 மொத்த செலவு நிரலில் காண்பிக்கப்பட்டுள்ளமையினால் மொத்த பெறுமதி பாதிக்கப்படவில்லை.	ஏசீஏ 2(ii) செலவின சுருக்கத்தின் காசு புத்தகத்தின் பிரகாரம் சரியான பெறுமதிகள் காண்பிக்கப்படல் வேண்டும்.
(iii)	நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளின் செலவினம் (6 ஆம் குறிப்பு) ரூபா 42,131,393 ஆக காணப்படுகின்ற போதிலும், செலவின சுருக்கத்தின் [ஏசீஏ-2(ii)] பிரகாரம் செலவினம் ரூபா 121,455,094 என காண்பிக்கப்பட்டுள்ளமையினால் ரூபா 79,323,701 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் ஏசீஏ-2(ii) மாதிரியின் பிரகாரம் 5 ஆம் குறிப்பின் மொத்த கூட்டுத்தொகை காண்பிப்பதற்கு நிரலொன்று இல்லாமையினால் அதன் கூட்டுத்தொகை (அ) இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.	நிதி செயலாற்றல் கூற்றில் செலவுகள் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும்.

(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	நிதி அல்லாச் சொத்துக்களின் கைதவிர்ப்பு பெறுமதி ரூபா 11,340 ஆன போதிலும், அது ரூபா 100,340 என காண்பிக்கப்பட்டிருந்தமையினால் கைதவிர்ப்பு பெறுமதிகளள் ரூபா 89,000 இனால் அதிகமாக கண்பிக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வு ஐயவினா ஊடாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 89,000 ஆன பெறுமதி சொத்துக்கள் உள்ளடக்கும் போது நேர்ந்த வழுவினை சீர் செய்யும் போதான இரட்டை பதிவாகும் எனவும் சிகாஸ் அமைப்பில் கைதவிர்ப்பு பட்டியலில்ல அப் பெறுமதி வழு சீர் செய்தலின் கீழ் காண்பிக்கப்படுகின்றது எனவும் அதாவது, ரூபா 100,340 பெறுமதியினுள் வழு சீர் செய்யும் போதான பெறுமதி ரூபா 89,000 உம் காணப்படுகின்றது எனவும் அப் பெறுமதி நிதி அல்லாச் சொத்துக்களின் தனிப்பட்ட மீதிகளில் எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்தாது.	நிதி அல்லாச் சொத்துக்களின் கைதவிர்ப்பு பெறுமதிகள் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும்.
(ii)	ஏனைய நிறுவனங்களால் திணைக்களத்திற்கு நிதி அல்லாச் சொத்துக்கள் கையளித்தல் (Transfer in) பெறுமதி ரூபா 852,800 தொகையான போதிலும், அது ரூபா 941,800 என காண்பிக்கப்பட்டிருந்தமையினால் ரூபா 89,000 ஆன தொகை அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.		நிதி அல்லாச் சொத்துக்கள் கையளிக்கும் போது பெறுமதிகள் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஒரு மீண்டெழும் செலவு விடயத்திற்கு மற்றும் நான்கு மூலதன செலவு விடயங்களுக்கான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு கூட்டுத்தொகை ரூபா 5,300,000 இல் கூட்டுத்தொகை ரூபா 3,503,236 பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்ததுடன் அச்	சொத்து கடன் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள் இடமாற்றப்பட்டு செல்லல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் உத்தியோகத்தர்கள் சொத்து கடன் பெற்றுக் கொள்ளாமை மற்றும் தேசிய வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 01/2024 பிரகாரம் அரச செலவுகள் கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையின்	நி.பி 50 பிரகாரம் சரியாக மற்றும் துல்லியமாக வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

	சேமிப்பு 35 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.	காரணத்தினால் அச் செலவின விடயங்களின் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டன.	
(ஆ)	மீண்டெழும் செலவின விடயமொன்றிற்கு தொடர்புடைய மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடான ரூபா 400,000 இல் நி.பி 66 ஊடாக ரூபா 150,000 வேறு செலவின விடயமொன்றிற்கு மாற்றுகை செய்யப்பட்ட பின்னரும், ரூபா 127,980 ஆன தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது தேறிய நிதியேற்பாட்டில் 51 சதவீதமாகும்.	தேசிய வரவு செலவு சுற்றறிக்கை 01/2024 இன் பிரகாரம் அரச செலவுகள் கட்டுப்படுத்தல் மற்றும் குறைந்த கிரயத்துடன் வாகனங்கள் காப்புறுதி பெற்றுக் கொண்டமையினால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி-
(இ)	மீண்டெழும் செலவின விடயங்கள் 03 இற்குரிய கூட்டுத்தொகை ரூபா 2,250,00 இல் அதாவது 33 சதவீதம் தொடக்கம் 44 சதவீதம் வரையான வீச்சில் நி.பி 66 ஊடாக நிதியேற்பாடுகள் அதிகரிக்கப்பட்டிருந்தது.	முன்னர் திட்டமிடப்படாத மற்றும் எதிர்பார்க்கப்படாத வண்ணம் ஏற்பட்ட வெளிநாட்டு பயிற்சி செலவினம், வாகனங்கள் பழுதுபார்த்தல் செலவு மற்றும் இயந்திர உபகரணங்கள் பழுதுபார்த்தல் செலவிற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதாமையின் காணரத்தினால் அச் செலவின விடயங்களுக்காக நி.பி 66 ஊடாக நிதியேற்பாடு மாற்றுகை செய்வதற்கு நேரிட்டது.	-மேற்படி-

3.2 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தின் காசு புத்தகம் பிரகாரம், 2024 ஒக்தோபர் மாத்தில் மூன்று உத்தியோகத்தர்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 581,244 தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்த போதிலும் அம் முற்பண வழங்கலானது முற்பண பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிராததுடன் அம் முற்பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படவில்லை.	தேர்தல் கடமைகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் முற்பணம் வழங்கும் போது மற்றும் தீர்ப்பனவு செய்யும் போது முற்பண பதிவேட்டில் குறித்த சில கொடுக்கல் வாங்கல்கள் நாளதுவரையாக்கப்படுவதற்கு தவறியுள்ளது.	முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தலானது முற்பண பதிவேட்டில் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

2020 ஆகஸ்ட் 20 திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை 02/2020 இன் 03 ஆம் பந்தியின் பிரகாரம், வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது மற்றும் செயற்படுத்தும் போது பின்வரும் குறைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் தொடர்புடைய செயற்பாடுளின் எதிர்பார்க்கப்படுகின்ற வெளியீடு (Out Put) மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற விளைவு (Out Come) காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அதன் செயன் முன்னேற்றம் ஒப்பிடுவதற்கு முடியவில்லை. திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட செயன் முன்னேற்றம் பரீட்சிக்கும் போது அதன் நிதி செயன் முன்னேற்ற பொறுப்பு பகுதி மற்றும் செயற்பாடுகளின் பிரகாரம் தனித் தனியே காண்பிக்கப்படாது பொதுவாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பௌதீக செயன் முன்னேற்றமும் தனித்தனியே காண்பிக்கப்படாது பொறுப்பு பகுதி பிரகாரம் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அச் செயன்முன்னேற்றம் கணிக்கும் போது துல்லியம் கணக்காய்வின் போது உறுதி செய்யப்படவில்லை.	அரச துறையின் பதவியணி மற்றும் ஊதிய முகாமைத்துவ பொறுப்பு பகுதியின் கீழுள்ள அனைத்து செயற்பாடுகளினதும் ஒட்டுமொத்த செயன்முன்னேற்றம் நிறுவன மட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.	அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	செயல் நடவடிக்கை திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் பொறுப்பு பகுதிக்கான செயற்பாடுகள் தொடர்பாக பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் முன்னேற்ற அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு பந்திக்குரிய பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(i)அரசாங்க துறையின் பதவியணி மற்றும் ஊதிய முகாமைத்துவ பொறுப்பு பகுதியின் கீழ் - பதவியணி தேவைப்பாடு மீளாய்வு செய்தல் • கொதலாவ பாதுகாப்பு பல்கலைக்கழகம், வைத்தியசாலை • மாகாண சபைகள் பதவியணி • பாடசாலை சார்ந்த பதவியணி - தேசிய மற்றும் சர்வதேச நிதி ஊடாக செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களுக்காக அடையாளப்படுத்தப்பட்ட நிபுணத்துவம் கொண்ட பதவிகள் அங்கீகரித்தல்.		
(ii)அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டப்பூர்வ நிறுவனங்களின் பதவியணி ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பதவி உயர்வு வழங்குதலை தரப்படுத்தல் பொறுப்பு பகுதியின் கீழ் - இதுவரை ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிராத பின்வரும் நிறுவனங்களின் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரித்தல் • பல்கலைக்கழகங்கள் • இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் • வீதி அபிவிருத்தி அதிகார சபை	குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் பதவியணி ஆட்சேர்க்கும் நடைமுறைக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	கணக்காய்வு பந்திக்கு அமைவாக காண்பிக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) **தரவு அமைப்பொன்று பேணிச் செல்லுதல்**		
திறைச்சேரியின் செயலாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் DMS/E/1/99 ஆம் இலக்க மற்றும் 1999 மே 05 திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முதல் நடவடிக்கையாக, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினுள் பொது தரவு மூலங்களை நிறுவுவதற்கு மற்றும் பல்வேறு முகவர் நிறுவனங்கள் இடையே ஒழுங்கற்ற முறையில் சிதறிக் கிடக்கும் தரவுகளை, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கீழ் ஒருங்கிணைத்து நாளதுவரையாக்கப்பட்டு மையப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன், திணைக்களத்தின் பிரதான பணிகளில் ஒன்றாக அரச துறையின் மற்றும் மாகாண அரச சேவையின் ஊழியர்கள் தொடர்பான தகவல் அமைப்பொன்றை பேணிச் செல்லும் தேவை அடையாளம் காணப்பட்டிருந்தது. ஆயினும், திணைக்களம் நிறுவப்பட்டு மீளாய்வாண்டு இறுதியில் 24 ஆண்டுகள் காலம் கடந்திருந்த போதிலும், தரவு அமைப்பொன்று உருவாக்கப்பட்டு தொடர்புடைய நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் பேணிச் செல்வதற்கு தவறியிருந்தது.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்காக தற்போது அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான பதவியணி தொடர்பான தகவல்கள் பேணிச் செல்வதற்கு இரண்டு முறைமைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அது ஆவணப்படுத்தப்பட்ட தரவுகள் மற்றும் கணினிமயமாக்கப்பட்ட தரவுத்தளத்தின் கலவையாக செயல்படுகின்றது. வினைத்திறனான முகாமைத்துவ தகவல் அமைப்பினை (Management Information System - MIS) நிறுவுவதற்கான தேவை அடையாளம் காணப்பட்டு அதற்காக (i) பொது திறைச்சேரிக்காக தற்போது செயற்பட்டு வரும் ஒருங்கிணைந்த திறைச்சேரி முகாமைத்துவ தகவல் அமைப்பின் (ITMIS), விசேட மனிதவள தொகுதி (HR-Module), தரவு தளமாக பயன்படுத்துவதற்கு தொடர்புடைய நடவடிக்கைகள் ஆரம்பித்தல். (ii) மாகாண சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பாக நிதி அமைச்சின், தகவல் தொழிநுட்ப முகாமைத்துவ திணைக்களத்துடன் (ITMD) இணைந்து Cadre Management Information System (CMIS) என்ற பெயரில் தரவுத் தளமொன்று அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	தாமதமின்றி திட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	**உள்ளவாரான பதவியணி தொடர்பான தகவல்கள் பேணிச் செல்லல்**		
	2017 ஆகஸ்ட் 15 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், அனைத்து அரச நிறுவனங்களிலும் உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு, சேவையை விட்டு விலகுதல், சேவையை விட்டு செல்லுதல், பணி நீக்கம், ஓய்வு பெறல் மற்றும் மரணித்தல் போன்ற விடயங்கள் தொடர்பன மாற்றங்களை குறிப்பிட்டு அரச துறையின் பதவியணி தொடர்பான தரவு அமைப்பு பேணிச் செல்லல் மற்றும் நாளதுவரையாக்கும் பொறுப்பு, திணைக்களத்திற்கு பணிக்கப்பட்டிருந்த போதிலும், அப் பொறுப்பு நிறைவேற்றப்பட்டமை உறுதி செய்யப்படவில்லை.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அரச நிறுவனங்களுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான பதவியணி தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் அறிக்கைகள் 2019 ஆம் ஆண்டின் பின்னரும் அதாவது 2020, 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதி அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த அறிக்கைகளுக்கு அரச துறையின் பதவியணி தொடர்பான தரவுகள் மற்றும் தகவல்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் முறையான வண்ணம் வழங்கப்பட்டுள்ளதுடன் அவ் ஆண்டு அறிக்கைகள் உரிய கால வரையறைக்குள் அமைச்சரவைக்கு மற்றும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது.	அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	2017 சனவரி 21 திகதிய 01/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை பிரகாரம், அரச நிறுவனங்களின் பணிகள் உகந்த மட்டத்தில் பேணுவதற்கு தேவையான குறைந்தபட்ச பதவியணி அடையாளம் காணப்பட்டு, அது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுவதற்கு மற்றும் அத் தகவல்களின் அடிப்படையில் பதவியணி மீளாய்வு குழுவொன்றின் ஊடாக ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தேவைப்படுகின்ற உகந்த பதவியணி தீர்மானிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறேனினும், 2024	முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை 01/2017 பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்ற பதவியணி மீளாய்வின் போது இனங்காணப்பட்ட சேவை தேவைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு மாகாண சுகாதார சேவை, மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்களுக்காக பதவியணி அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் பல்கலைக்கழகங்களுக்கான கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியும், தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகளின் கல்வி பதவியணிக்காக பாடசாலை அடிப்படையிலான பதவியணியும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டில் விவசாய மற்றும் சுகாதார துறைகளில் மற்றும் மாகாண சபை பதவியணி	சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 1027 அரச நிறுவனங்களில் 765 நிறுவனங்களின் பதவியணி மீளாய்வு அறிக்கைகள் பெற்றுக் கொள்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.	மீளாய்வு செய்வதற்கு அறிவிக்கப்பட்டு தேவையான தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

4.3 பெறுகை திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பெறுகை திட்டத்தில் மதிப்பிடப்பட்ட கிரயமும் உள்ளவாரான கிரயமும் ஒப்பிடும் போது 2 செலவின விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட கிரயத்தினை மிகைத்து செலவு ஏற்கப்பட்டுள்ளதுடனும், 4 செலவின விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட கிரயத்தினை விட குறைவாக செலவு ஏற்கப்பட்டுள்ளதுடன் ஒரு செலவின விடயத்திற்காக மதிப்பிடப்பட்டுள்ள போதிலும் எந்தவொரு செலவும் ஏற்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	எதிர்பார்க்கப்படாத பராமரிப்பு செலவுகள் ஏற்க நேரிடல், இயந்திரங்கள் புழுதுபார்த்தலுக்கு நேரிட்டமையினால் மேலதிக நிதியேற்பாடு பெற்றுக் கொள்ளல். எழுது பொருட்கள் உரிய காலத்தில் பெறப்படாமை, நிலையான சொத்துக்கள் பழுதுபார்த்தலுக்காக விண்ணப்பங்கள் முன்வராமை, செலவுகள் மட்டுப்படுத்தப்படலினால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டது.	சரியாக மற்றும் துல்லியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

5. மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 91 காணப்பட்டதுடன், அதில் 12 வெற்றிடங்கள் காணப்படுகின்றதுடன் அதில் திணைக்களத்தின் செயலாற்றலினை பாதிக்கும் சிரேஷ்ட நிலையில் 06 பதவிகளும் இரண்டாம் நிலையில் 04 பதவிகளும், முதன்மை நிலையில் 02 பதவிகளுமாக வெற்றிடங்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம், வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தப்படவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் ஆட்சேர்ப்புக்களின் போது வெற்றிடங்கள் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.